அன்பின் வடிவம்

அன்னை ஸ்ரீ

# சாரதா தேவி

அன்னையின் குழந்தை

சு. சந்திரா

உ

அருள்மிகு அன்னை ஸ்ரீ சாரதாதேவி 

# கட்டுரை

"அன்பால் உலகை உனதாக்கிக் கொள்"
- அன்னையார்

முன்னுரை:

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"

என்ற தேசிய கவி பாரதியின் பொற்சொல்லை முன் நிறுத்தி என் தாய் தமிழை தலைவணங்கி என் கட்டுரையை தொடங்குகிறேன். "அன்பே சிவம்" கடவுளைத் தேடி எங்கெங்கோ உலகில் உழல்பவர்களுக்கு ஏற்ற வாக்கியம் இதுவே ஆகும். அன்பு எங்கு இருக்கிறதோ அங்குதான் இறைவன் வசிக்கிறார். "அன்னை என்றாலே அன்பு" என்று தான் பொருள். "அன்பால் உலகை உனதாக்கிக் கொள்" என்ற வாக்கியத்திற்கு அன்னை ஸ்ரீ சாரதா தேவியே வாழ்ந்து காட்டிய உதாரணம் ஆவார். தன் வாழ்க்கையையே தன்னை நாடி வந்த குழந்தைகளுக்காக அர்ப்பணித்த புனித கங்கைக்கு நிகரானவர் நம் அன்னையார். "தன்நலம் பாராது பிறர்நலம் பார்ப்பவர்" அன்னையார். இத்தகு பெருமை கொண்ட என் அன்னையைப் பற்றி நான் எழுதுவதில்

அன்பு உருவமெடுத்து அன்னையாய்
பிறந்த தினம்:

மேற்கு வங்காளம் என்னும் மாகாணத்தில் பாங்குரா ஜில்லாவில் ஜெயராம்பாடி என்னும் அழகு அலை மோதும் கிராமத்தில் பிறந்தவர் நம் அன்னை. சிம்ஹவாஹினி என்று அழைக்கப்படும் அம்பாள் அவ்வழகிய கிராமத்தின் அதிஷ்டான தேவதை ஆனாள். ராமச்சந்திர முகோபாத்யாயர் இன்னியல்பு, அடக்கம், பணிவு முதலியவற்றை அணிகலன்களாய் கொண்டவர். இவரே நம் அன்னையாரின் தந்தை ஆவார். "விதை ஒன்று போட சுரை ஒன்றா முளைக்கும்" என்பது போல தம் தந்தையின் நல் அணிகலன்-களையும் தமதாக்கிக் கொண்டவர் நம் அன்னையார் சியாமா சுந்தரி தேவி களங்கமற்ற நெஞ்சம், குழந்தை இயல்பு முதலிய மேன்மைகள் கொண்டவர். இவரே நம் அன்னையின் அன்னை. இப்புனித தம்பதியருக்கு கி. பி 1853 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் சதமியன்று மார்கழித் திங்கள் கிருஷ்ண பக்ஷம் சப்தமியன்று நம் கதையின் நாயகி அன்பின் சொரூபமாய் இப்பூவுலகில் அவதாரம் எடுத்தார். சாரதாமணி என்பது நம் அன்னையின் பிள்ளைத்திருநாமம் ஆகும்.

அன்னையாரின் திருமணம்:

ஜெயராம்பாடிக்கு சற்று மேற்கு திசையில் சிஹூர் என்னும் கிராமம் உண்டு.

'திருமணம் கடவுளால் நிச்சயிக்கப்பட்டது" என்பர் பெரியோர். அது உண்மை தான் போலும். ஏனெனில் ஒரு முறை சிஹூரில் நடந்த சிவன் கோவிலின் திருவிழாவிற்கு அன்னையும் வந்திருந்தார். சிறு வயது, எனவே அங்குமிங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பெண் அன்னையை அழைத்து சாரதையுடன் சற்று பேசலாம் என நினைத்தார். அப்பொழுது அப்பெண் விளையாட்டாக அங்கு விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களைக் காட்டி, "குழந்தாய், இவர்களுள் நீ யாரை மணந்து கொள்வாய்? சுட்டிக் காட்டு பார்ப்போம்' என்று அந்த மங்கை கேட்டவுடன் அன்னையின் சுட்டு விரல் கதாதர் (ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்) நோக்கி காட்டியது. பிற்காலத்தில் அவர் கை நீட்டி காட்டியவரையே தான் கைபிடித்தார் நம் அன்னை. 1859 ம் ஆண்டு மே மாதம் அன்று நம் அன்னை தன் திருமண வாழ்க்கையில் அடி எடுத்து வைத்தார். "ராமகிருஷ்ணர் காளி தேவியின் பரமபக்தர்". எனவே அவர் திருமணத்திற்கு பிறகும் தம் பணியைத் தொடர தக்ஷிணேசுவர கோயிலுக்கு புறப்பட்டார்.

உருவமில்லாத ஒன்று உலகத்தை 4

ஆளுகிறது என்றால் அது அன்பு மட்டுமே:-

சாரதைக்கு அப்பொழுது வயது பதினான்கு அப்பொழுது அவர் ஒரு திவ்ரூபம் அறியவில்லை. வயது பதினெட்டு ஆனவுடன் சற்று அவர் உலகைப் பற்றி புரிந்து கொள்ள ஆரம்பித்தார். ஊர் மக்கள் அனைவரும் கதாதர் காளிதேவியை நினைத்து பைத்தியம் ஆகி விட்டார் என்று உரைத்தனர்.

" சிறு கனலை காட்டுத்தீயாம் மாற்றும் மக்களின் பேச்சு"

எனவே மக்களின் பேச்சால் மனமுடைந்த அன்னை சில மகளிர்களுடன் தக்ஷிணேசுவரம் நோக்கி புறப்படலானார். செல்லும் பாதையில் எத்தனை தடைகள் வந்தாலும் போராட மனதுடன் முன்னேறிச் சென்றார். பின்பு மற்றுமொருமுறை அவர் தக்ஷிணேசுவரம் செல்லுகையில் செல்லும் பாதையோ சரியான பொட்டல் காடு. ஏற்கனவே மூன்று நாள் தக்ஷிணேசுவரம் நோக்கி பயணம் மேற்கொண்டதால் கால் தன் வலிமையை இழந்திருந்தது. கொலை, கொள்ளைக்குக் பெயர் போன இடம் அது. தன்னோடு வந்த பெண்களை தொடர்ந்து வேகமாக போகச் சொல்லி விட்டு அன்னை சற்று மெதுவாக நடந்து சென்றார். "கதிரவன் தன் ஒளியை மறைத்ததும் காரிருள் தோன்றியது" அப்பொழுது தீ போன்ற கண்கள் மலை போன்ற உடல் கொண்ட உருவம் அன்னையை நோக்கி

அப்பொழுது அன்பே உருவெடுத்த அன்னையானவர் மனதில் சிறிதளவும் அச்சமில்லை. "இங்கு தனியாக இவ் வேளையில் நிற்பவர் யார்" என்று கனத்த குரலில் கேட்டது. "அப்பா, நான் உன் குழந்தை சாரதை உன் மருமகனாரைக் காணப் போகிறேன்" என்றார். அம்மனிதனின் மனைவியும் அருகில் வந்த பிறகு, "அம்மா, நல்ல வேளை நீயும் தந்தையும் இங்கு வந்தீர்கள்". என்று உரைத்த அந்த மெல்லிய சொற்கள் அவனின் கல் நெஞ்சை கரைத்தன. அன்றிரவு முழுவதும் அத்தம்பதியினர் நம் அன்னையை அவர்களின் மகளாகவே கருதி வழியனுப்பி வைத்தனர்.

"அன்பைக் கொண்டு அகிலத்தை வெல்லலாம்"

என்பதை அன்று தன் வாழ்க்கையின் ஒரு நிகழ்வு மூலம் நிரூபித்துக் காட்டியவர் நம் அன்னையார்.

காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு:

ஒரு காக்கையானது கருப்பாக இருப்பினும் அதன் தாய் காக்கைக்கு அது குழந்தையாகும். எனவே அன்னை என்பவள் தன் குழந்தைகளிடம் வேறுபாடு காண்பது இல்லை என்பதைக் கூறும் ஒரு நிகழ்வு பற்றி காணலாம். அன்னையார் எப்பொழுதும் ஆயத்தம் செய்த

பொருட்களை குருதேவருக்கு கொண்டு செல்வது வழக்கம். அன்று அதே போல கொண்டு செல்கையில் பெண் ஒருத்தி, "அம்மா, இன்று நான் குருதேவருக்கு சாப்பாடு பரிமாறலாமா!" என்றாள். உடனே அன்னை உணவுத் தட்டினை அவள் கையில் கொடுத்தார். அவள் பரிமாறிய உணவினை உண்ண குருதேவருக்கு இயலவில்லை. அப்பொழுது அப்பெண் சென்றவுடன் குருதேவர் இப்பெண் ஒழுக்கத்தில் மேன்மை அற்றவள். இனி இதுபோல் "நீ யாரிடமும் இதுபோன்று உணவு கொடுத்து விடக் கூடாது" என்றார். அதற்கு நம் அன்னை "நான் முடிந்தவரை, முயற்சிக்கிறேன். ஆனால் ஒருவர் ஒழுக்கமற்றவராய் இருப்பினும், அன்பு உள்ளம் கொண்டு ஒன்றை வேண்டும் பொழுது என்னால் மறுக்க இயலாது" என்று கூறிய நம் மேலானத் தாயின் கருணை உள்ளத்தைக் கண்டு மெய் சிலிர்த்தார் நம் குருதேவர்.

"ஒரு பெண் கருவுற்றால் ஒரு குழந்தைக்கு தாயாகலாம், ஆனால் 'கருணை' உற்றால் உலகிற்கே தாயாகலாம்". அன்னை உலக ஜீவன்கள் அனைத்தையும் தன் குழந்தையாக ஏற்றவர். எனவே நம் அனைவரும் அன்னையின் மன் குழந்தைகள் தான்.

நிழலாய் அன்னை தொடர்கிறார்:

அன்புக்கு எல்லை என்பதே இல்லை. அன்பானது எந்த எல்லையையும் கடக்க வைக்கும் என்பதற்கு உதாரணமாக ஒரு நிகழ்வு. ஒரு முறை கோல் பூர்ணிமா திருநாள் அன்று சுமாதேவி என்ற அன்னையின் பக்தையும் கலந்து கொண்டார். சிறுவர்கள் வண்ணப் பொடிகளைத் தூவி கோலாகலமாக விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது எதிர் பாராமல் சுமாதேவியின் காதினுள் வண்ணப் பொடிகள் நுழைந்தது. பின்பு சில நாட்களில் அவர் கண்களில் பயம் தோன்றியது, ஒன்னில் அவர் காதில் இருந்தி, நீர், இரத்தம், சீழம் வடிய ஆரம்பித்தது. காது முழுதும் வீங்கியது. மருத்துவர்கள் கை விரித்தனர். திடீரென, " என் தோள்களில் யார் உட்கார்ந்திருக்கிறார்? "என்றார் சுமாதேவி. " அக்கா, சிவப்பு கரை அணிந்த சேலையுடன் அன்னையார் இங்கு வந்தார்". என்று தன் சகோதரியிடம் கூறினார். மறுநாள் காலையில் சுமாதேவியின் காதில் சிறு வடுவைத் தவிர வேறு ஒன்றுமில்லை. மருத்துவ உலகம் காணாத அதிசயம். அது. ஆஹா! என்ன அற்புதம்.

" இன்று அன்னை தன் பூதஉடலை நீத்திருந்தாலும்
கருணை வெள்ளமாய் நம் நெஞ்சில் அவர்
நீற்றிருந்து நம்மை என்றும் ரட்சிப்பார்"

மகனை நோக்கிய அன்னையின் எதிர்பார்ப்பு:-

ஒரு முறை கீழ் வனக்காடத்தில் ஒருவன் அன்னையைப் பற்றி கேள்வியுற்று அன்னையை தரிசிக்க எண்ணினான். "அன்பிற்கு கால் இல்லை, கண் இல்லை ஆனால் எந்தக் கடலையும் தாண்டி வரும். எந்த மனதையும் பார்த்து விடும்" அதுபோல, தன் தாயினை காண நடந்தே வந்தார். அங்கு அன்னையும் தன் மகன் ஒருவன் தன்னைக் காண வருகிறான் என்பதை உணர்ந்தார். அதற்கான ஆயத்தங்கள் நிகழ்ந்தன. அந்த வாலிபன் நடந்து வந்து, "நான் அன்னையை தரிசிக்க வேண்டும்" என்றார். 'நான் தான் உன் அன்னை" என்று கூறவும் அவன் அடியற்ற மரம் போல ஆனான். அன்னை அவரை இளைப்பாற வைத்து கால்களில் வெந்நீர் ஊற்றி நீராட்ட சென்றார் நம் அன்னை. "தம் திருக்கரம் தீண்டப் பெற்ற தீர்த்தம் என் காலில் படுவது முறையன்று" என்றார் அந்த இளைஞன். "உன் தாய் உன்னை நீராட்டியதுண்டா?" என்றார். "ஆம்" என்றான். "அப்படியானால் என்னை நீ தாயாக ஏற்கமாட்டாயா?" என்றார். அந்த இளைஞன் இடி விழுந்தாற் போல நின்றான். பின்பு மந்திரத்தையும் பெற்றான்.

"அன்பு கொண்ட வார்த்தை அகிலத்தை வெல்ல வல்லது"

பவித்ர தாய் :-

"பூவோடு சேர்ந்து நாரும் மணக்கும்" என்பர் அதுபோல தெய்வத்தன்மை வாய்ந்த அன்னையும் அன்னையுடன் சேர்ந்தவர்களும் பவித்திர தன்மை அடைவது திண்ணம். நிறைமனம் நழுவிய பெண் ஒருத்தி, தன் கடந்த கால நிகழ்வை எண்ணி வருத்தமுற்று அன்னையிடம் கூறி அழுதாள். அன்னை "கலங்காதே மகளே! கடந்த காலத்தை மறந்து புது உலகம் உனக்காக உலகம் காத்திருக்கிறது, காயத்திற்கு காலமே மருந்தளிக்கும்" என்றார் நம் அன்னை சொல்லிக் கொண்டே அப்பெண்ணை தன் தோளில் சாய்த்து ஆறுதல் கூறினார். "அப் பொன்னான சொற்கள் இறுகிய மறுபாறையில் சிறு சிறு துளியாய் நீர் விழுந்து கரைப்பது போல அவளின் மன இறுக்கத்தைக் கரைத்து சென்றன" அன்னை எப்பொழுது அவளைத் தீண்டி அரவணை-த்தாரோ அப்பொழுதே அப்பெண் பாவங்களில் இருந்து முக்தி பெற்று பவித்ர தன்மையை அடைந்தாள். அன்றுமுதல் அப்பெண்ணின் வாழ்வு, "வாடிய பூவில் , அன்பென்னும் தென்றல் பட்டு வாழ்க்கை வசந்தமாய் காட்சியளித்தது"

முடிவுரை:-

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற வள்ளுவரின் வாக்கை வாழ்க்கையாக மாற்றியவர் நம் அன்னையார். மனிதன் ஒருவன் பூமியில் பிறந்து பின் தெய்வத்தன்மை அடைவது என்பது அசாதாரணமானது. ஒருவன் தன்னுடைய நற்குணங்களால், என்றும் துணையாக நிற்கும் தர்ம வழியால் தெய்வத் தன்மையை அடைகிறான். "எந்நிலை வரினும் தன் நிலை மறத்தல் கூடாது" என்பர். வாழ்வில் எந்த நிலை உண்டாயினும் தர்ம வழி விலக தபம் புரளக் கூடாது. அன்பு என்பதி உருவம் அற்றது. என்னும் மனிதர்களில் வாழ்கிறது அதுபோல், அன்னை தன் வாழ்வில் தன் கடமையிலிருந்தும், தர்ம வழியில் இருந்தும் தவறாது தெய்வ நிலையை அடைந்தார்.

"ஒருவனை கண்டிக்கவும், தண்டிக்கவும்
ஆயிரம் காரணம் இருக்கலாம், ஆனால்
மறக்கவும், மன்னிக்கவும் ஒரே காரணம்
அன்பு?...

எனவே வாழ்க்கையில் அன்பைக் கொண்டு அகிலத்தை வெல்லலாம். ஆஹா! எத்தனை வியக்கத்தகு நிகழ்வுகள், என்றும் என் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் அன்னையின் பாதம் பணிகிறேன்.